மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிறைவேற்றப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

117—

நூலகக் கட்டடம்

***39915—திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவில், காந்திநகர் பகுதியிலுள்ள நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் தொகுதி, காந்திநகர் பகுதியில் செயல்படும் ஊர்ப்புற நூலகம், சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் இலவசமாக வழங்கப்பட்டுள்ள தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. இந்நூலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்குக் காலிமனை வழங்குமாறு சங்கரன்கோவில் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டுள்ளது. காலிமனை கிடைக்கப்பெற்றவுடன் காந்திநகர் ஊர்ப்புற நூலகத்திற்குப் புதிய கட்டடம் விரைவாகக் கட்டிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “பயிற்றுப் பலகல்வி தந்து—இந்தப் பாரை உயர்த்திடல் வேண்டும்” என்ற பாரதியின் வரிகளுக்கும்,*

கல்வி என்பது வலிமையான ஆயுதம், அதைக்கொண்டு இந்த உலகையே மாற்றலாம். "Education is the most powerful weapon which you can use to change the world" என்ற நெல்சன் மண்டேலா அவர்களின் வரிகளுக்கு உயிர் கொடுத்து, பள்ளி மாணவ–மாணவியருக்கு 14 வகையான நலத் திட்டங்களை வழங்கி, கல்வியில் புரட்சியை ஏற்படுத்தி, தமிழகத்தை மாற்றிக் காட்டி வெற்றி கண்டவர் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வகுப்பறையுடன் முடியும் படிப்பை வரம்பில்லா எல்லைக்குக் கொண்டு செல்ல மாணவர் சமுதாயத்தின் கையில் அளவில்லா அறிவியல் யுகத்தை, மடிக்கணிணியைக் கொடுத்திருக்கும் வரலட்சுமி எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைப் பணிவுடன் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சங்கரன்கோவில் தொகுதி, காந்திநகரிலே ஊர்ப்புற நூலகமானது செயல்பட்டு வருகின்றது. ஆதி திராவிட சமுதாயத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் அந்த ஊர்ப்புற நூலகமானது செயல்பட்டு வருகின்றது. இந்தச் சமுதாயத்திலிருந்து 5 சென்ட் நிலம் வழங்குவதற்காக அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அந்த நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையரிடம் இடம் வழங்குவதற்காக கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களை ஈடுபடுத்தி அந்த இடத்தை கூடிய விரைவில் பெற்றுத் தர வேண்டும். அதற்குத் தேவையான நிதி தாராளமாக இருக்கிறது. ஆகவே, இடம் கிடைத்தவுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச்சென்று உடனடியாகக் கட்டடம் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி. ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காந்திநகர் பகுதியானது ஆதி திராவிடர் மக்கள் வாழக்கூடிய பகுதியாகும். அந்தச் சமுதாயத்திற்குப் பாத்தியப்பட்ட 5 சென்ட் நிலம் உள்ளது. அந்தச் சமுதாயத் தலைவர்கள் அனைவரும் அந்த இடத்தை எழுதிக் கொடுப்பதற்குத் தயாராக உள்ளனர். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நிதியை ஒதுக்கி, சொந்தக் கட்டடம் கட்டித் தருவாரா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மீண்டும், மீண்டும் அதனையே வலியுறுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இருந்தாலும் கூடிய விரைவில் அந்த இடத்தினைப் பெற்று, புதிய கட்டடம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

118—

மாணவர் விடுதி

***4609—திரு. பி.எல். சுந்தரம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், தாளவாடி ஒன்றியம், ஆசனூரில் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?